Cr. Mis.39(Eng) 663697 - 11 - 2- 70

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

SESSIONS CASE NO.23/2021

Deposition of PW1 Witness for

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஏ.கீர்த்திகா | Village | : | |
| Husband's Name | : | அஜித்குமார் | Calling | : | |
| Age | : | | Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the

20th day of March 2025.

(A1 to A4 are present. A5 is absent and petition U/S.317 Cr.P.C. is allowed.)

மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை**

சம்பவத்தின் போது நான் எனது வீட்டில் தான் இருந்தேன். சம்பவம் பற்றி கேள்விப்பட்டு நான் ஒரு மணி நேரத்தில் சம்பவம் இடம் சென்றேன். நான் எனது மாமியார் மற்றும் எனது கணவரின் அண்ணன் ஆகியோர் சம்பவம் இடம் சென்றோம். நாங்கள் அங்கு செல்லும்போதே அங்கு போலிசாரும் பொதுமக்களும்

அங்கே இருந்தார்கள். அந்த இடத்தில் சுமார் 30 நபர்கள் இருந்திருப்பார்கள். சம்பவ இடத்தில் நாங்கள் மூவரும் சுமார் அரை மணி நேரம் இருந்தோம். காலை சுமார் 11.30 மணியளவில் நாங்கள் மூவரும் சம்பவம் இடம் அடைந்தோம். எங்களுக்கு காலை சுமார் 10.30 மணியளவில் சம்பவம் பற்றிய தகவல் கிடைத்தது. சம்பவ காலத்தில் நான் கருவுற்றிருந்தேன். புகாரை ஸ்டேசனில் எழுதினார்கள். அப்போது பகல் 1 மணி இருக்கும். எனக்கு சம்பவம் பற்றி தகவல் கொடுத்த நபர் பற்றி நான் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. புகாரில் எனது கணவரை தாக்கியவர்களின் பெயர்களை அனுமானத்தின் பேரில் தான் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். காவல் நிலையத்தில் என்னை மூன்று நான்கு முறை விசாரித்தார்கள். எனது கணவரின் அன்றாட நடவடிக்கைகள் பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது.

(சாட்சியை மறுவிசாரணை செய்ய கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் வேண்டுகோள் அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மறுவிசாரணை செய்யப்படுகிறார்.)

(புகாரில் குறிப்பிட்டப்பட்டுள்ள லால் நீதிமன்றத்தில் அடையாளம் காண்பிக்க முடியுமா என்றால் முடியும். அவர் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகியுள்ளார். (சாட்சி குறிப்பிட்ட நபரை அடையாளம் காண்பிக்க அவர் பெயர் என்ன என்று கேட்டபோது ஆகாஷ் என கூறினார்.)